*5*

# பலமான, மகிழ்ச்சியான கிறிஸ்தவக் குடும்பங்களைக் கட்டியெழுப்புதல்

**வேதபாடப் பகுதி:** *சங்கீதம் 127.*

*கர்த்தர் வீட்டைக் கட்டாராகில் அதைக்*
*கட்டுகிறவர்களின் பிரயாசம் விருதா;*
*கர்த்தர் நகரத்தைக் காவாராகில்,*
*காவலாளர் விழித்திருக்கிறது விருதா.*
*நீங்கள் அதிகாலையில் எழுந்து,*
*நேரப்பட வேலையிலே தரித்து,*
*வருத்தத்தின் அப்பத்தைச் சாப்பிடுகிறதும் விருதா;*
*அவரே தமக்குப் பிரியமானவனுக்கு நித்திரை அளிக்கிறார்.*
*இதோ, பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்தரம்,*
*கர்ப்பத்தின் கனி அவரால் கிடைக்கும் பலன்.*
*வாலவயதின் குமாரர் பலவான் கையிலுள்ள*
*அம்புகளுக்கு ஒப்பாயிருக்கிறார்கள்.*
*அவைகளால் தன் அம்பறாத்தூணியை*
*நிரப்பின புருஷன் பாக்கியவான்;*
*அவர்கள் நாணமடையாமல் ஒலிமுகவாசலில்*
*சத்துருக்களோடே பேசுவார்கள்*
*(சங்கீதம் 127).*

*127ம் சங்கீதம் எருசலேமை நெருங்கும் வேளையில் மற்றும் விசேஷமாக, தேவாலயம் கண்ணுக்குத் தெரிகையில், யூதத்திருப்பயணிகளால் பயன்படுத்தப்பட்ட ஒரு “ஆரோகண சங்கீதமாக” இருந்தது. அந்தக் காட்சியமைவில் பயன்படுத்தப்படும்போது, “வீடு” மற்றும் “நகரம்” என்ற வார்த்தைகள் சிறப்பு அர்த்தம் கொண்டிருந்தன; “வீடு” என்பது தேவாலயத்தைக் குறித்தது, மற்றும் “நகரம்” என்பது எருசலேமைக் குறித்தது. யெகோவா - கல்லோ அல்லது செங்கல்லோ அல்லது சிமெண்ட் கலவையோ அல்ல - தேவாலயத்திற்குத் தனிச்சிறப்பைக் கொடுத்து எருசலேமை பெலப்படுத்தியிருந்தார்.*

*இருப்பினும், “வீடு” என்ற வார்த்தையானது அதைக்காட்டிலும்*

அதிகம் பரவலான தனிச்சிறப்பைக் கொண்டிருந்தது. மூலவசனத்தில் "வீடு" என்ற வார்த்தைக்கு முன்னால் திட்டவட்டமான சுட்டுச்சொல் ("the") இல்லை. நேரடி அர்த்தத்தில் இவ்வசனமானது, "கர்த்தர் வீட்டை - எந்த வீட்டையும் - கட்டாவிட்டால்" என்றே கூறுகிறது. சங்கீதத்தை மீண்டும் கண்ணோக்குங்கள். இல்லம்தான் இதன் பிரதான வலியுறுத்தமாக உள்ளது; "இதோ பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்தரம்; கர்ப்பத்தின் கனி அவரால் கிடைக்கும் பலன்." இவ்விதமாக இந்த சங்கீதத்தின் திறவைக் கூற்றில் குடும்பம் உள்ளடக்கப்பட்டு இருக்கிறது; கர்த்தர் இல்லத்தைக் கட்டாவிட்டால், அதைக் கட்டுகிறவர்களின் பிரயாசம் விருதா; "கர்த்தர்" குடும்பத்தைக் கட்டாவிட்டால், அதைக் கட்டுகிறவர்களின் பிரயாசம் விருதா. "கர்த்தர்" மற்றும் "குடும்பம்" என்ற வார்த்தைகளைச் சிந்தையில் காத்துக்கொள்ளுங்கள்; இந்த எடுத்துரைப்பில் நாம் அந்த வார்த்தைகளுக்கு மீண்டும் மீண்டும் திரும்புவோம்.

திருமணம் மற்றும் இல்லம் பற்றிய பாடத்தொடரை நாம் தொடருகையில், இல்லத்தில் உறவு முறைகள் பற்றி நாம் கண்ணோக்குவோம்; இப்போதைக்கு நாம், பெற்றோர்த்துவம் என்ற தலைப்பின் மீது கவனம் குவிப்போம்.

இந்தப் பாடம், "பலமான, மகிழ்ச்சியான கிறிஸ்தவக் குடும்பங்களைக் கட்டியெழுப்புதல்" என்று அழைக்கப்படுகிறது.[1] நம்மில் பலர், குடும்பங்கள் அதைப்போன்று இருக்க வேண்டும் என்றே விரும்புகின்றோம். கல்லூரியில் மேல் நிலை வகுப்பில் படிப்பவர்கள், Fortune 500[2] கம்பெனிகளின் முதன்மைச் செயல் அலுவலர்கள் மற்றும் சிற்றின்பப் பத்திரிகைகளின் சந்தாதாரர்கள் என்ற பலதரப்பட்டவர்கள் அடங்கிய குழுக்களிடத்தில் ஒரு ஆய்வு நடத்தப்பட்டது. இந்தக் குழுக்களில் உள்ள எல்லா மக்களும், பலமான குடும்ப உறவுமுறைகள் கொண்டிருப்பதைத் தங்கள் முதன்மையான விருப்பமாகத் தெரிவித்தனர்.

இராய்ஸ் மணி[3] என்பவர் ஒருமுறை, மிஸ்ஸவுரியின் ஸ்பிரிங்ஃபீல்டு என்ற இடத்தில் உள்ள குடிமை கழகம் ஒன்றில் உரையாற்றினார். அவர் அங்கிருந்த அனைவருக்கும் பொருளடக்க அட்டை ஒன்றைக் கொடுத்து அவரவர் மிக உயர்வாக மதிக்கும் ஐந்து விஷயங்களைத் தங்கள் தங்கள் அட்டைகளில் பட்டியலிடும்படி கூறினார். மக்கள், பணிப்பொறுப்புகள் அல்லது கருத்துக்கள் என்பவற்றை அவர்கள் உள்ளடக்க முடிந்திருந்தது. அந்தப் பயிற்சியினிமித்தம் அவர்கள் போராடிய பின்பு அவர், "நான் உங்களுக்கு மோசமான செய்தியொன்றை வைத்துள்ளேன்: உங்கள் பட்டியலில் நீங்கள் ஒரு விஷயத்தை [மாத்திரம்] அடையாளமிட வேண்டும்" என்று கூறினார். குழுவினர் முறுமுறுத்தனர். பின்பு மணி அவர்கள், இன்னுமொரு விஷயத்தை, பின்பு இன்னுமொரு விஷயத்தை அவர்கள் அடையாளமிடுதல் என்பது, மும்முரமான பணியாயிற்று. கடைசியில் பட்டியலில் இரண்டு விஷயங்கள் மாத்திரம் விடப்பட்டிருந்தன. மணி அவர்கள், "நான் இன்னொரு விஷயத்தை அடையாளமிடும்படி உங்களிடம் கேட்கும் அளவுக்கு அற்பமாய் இருக்கப்போவதில்லை" என்றார். பின்பு அவர், அங்கிருந்தவர்களிடம், "உங்களில் எத்தனைபேர்,

உங்களிடம் உள்ள அட்டையில் குடும்பம் தொடர்பான ஏதோ ஒரு விஷயத்தை விட்டுவைத்திருக்கின்றீர்கள்?" என்று கேட்டார். ஏறக்குறைய ஒவ்வொரு கரமும் உயர்ந்தது. அடுத்ததாக அவர், "உங்களில் எத்தனைபேர், உங்களிடம் உள்ள அட்டையில் தேவனுடன் உங்களுக்குள்ள உறவு தொடர்பான ஏதோ ஒரு விஷயத்தைக் கொண்டிருக்கின்றீர்கள்?" என்று கேட்டார். மீண்டும் ஏறக்குறைய ஒவ்வொரு கரமும் உயர்ந்தது. வேலைகள், பொழுதுபோக்குகள், அரசியல் சுதந்திரம், மற்றும் பிற விஷயங்கள் யாவும் குடும்பம் மற்றும் தேவன் ஆகியவற்றிற்கு அடுத்தவைகளாகவே இருந்தன. மணி அவர்கள் இன்னும் ஒரு கேள்வியைக் கொண்டிருந்தார்: "இந்த நிறைவான முன்னுரிமைகள் பற்றி சிந்தித்துப்பார்க்க நீங்கள் எவ்வளவு நேரம் செலவிடுகின்றீர்கள்?" அந்தக் கூட்டத்தில் இருந்தவர்களின் முகங்களின் தோற்றமானது அவரது கேள்விக்குப் பதில் அளித்தது.

இந்தப்பாடத்தில் நாம், குடும்பம் மற்றும் தேவன் ஆகியவை பற்றிப் பேசுகின்றோம். நாம் ஒரு நேர்மறையான அணுகுமுறையை மேற்கொள்வோம்: "பலமான, மகிழ்சியான கிறிஸ்தவக் குடும்பங்களைக் கட்டியெழுப்புதல்." இன்றைய நாட்களில் பல குடும்பங்களில் தவறாக உள்ளவற்றைக் கண்ணோக்குவதற்கு நாம் அதிகம் காணவேண்டும் என்ற அவசியம் இல்லை. விவாகமுறிவு, உண்மையற்ற தன்மை, பிள்ளைகளைத் தவறாக நடத்துதல் மற்றும் குடும்ப வன்முறை ஆகியவைபற்றி நாம் பொலிவற்ற புள்ளிவிபரக் கணக்குகளைத் தரமுடியும்.[4] மாறாக, நாம், வெளிச்சமான பக்கத்தைப் பற்றிக் கண்ணோக்குவோம். மகிழ்வான குடும்பங்களும் - பலமான குடும்பங்கள், கிறிஸ்தவக்குடும்பங்கள் என்பவைகளும் - இங்கு உள்ளன. "அவர்களை அவ்வாறு ஆக்குவது எது?" என்பது நாம் கேட்கின்ற கேள்வியாக உள்ளது. இந்தக் குடும்பங்கள் தேவனுடைய விருப்பப்படியே இருக்கின்றன என்பது தெளிவான பதிலாகும்.

அது ஒருவேளை சிறிதளவு தெளிவற்றதாக இருக்கலாம். நம்மில் பலருக்கு ஒரு பாடக்கருத்தைப் பற்றி பிடிப்பதற்கு "கைப்பிடிகள்" தேவைப்படுகின்றன. நிக் ஸ்டின்னெட் என்பரால் செய்யப்பட்ட ஆராய்ச்சியில் இருந்து நாம் ஆறு உண்மைகளைப் பற்றிக்கொள்ள முடியும்.

பல ஆண்டுகளுக்கு முன்பு, ஆக்லஹாமா மாகாணப் பல்கலைக் கழகத்தில் குடும்பப்படிப்புகளுக்கு விரிவுரையாளராக இருந்த முனைவர் ஸ்டின்னெட் அவர்கள், பலமான குடும்பத்தை ஏற்படுத்துபவை எவை என்பது பற்றி அதிகம் அறிவதற்கு ஆர்வமுள்ளவராய் இருந்தார். அந்த காலத்தில், குடும்பத்தில் தவறாக இருந்தது எது என்பது பற்றியே பிரதானமாக ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அவர் பலமான குடும்பங்களைப் பற்றிப் படிக்கத் தொடங்கினார். அவைகள் தகுதிப்படுத்தப்படுவதற்கு, மிக உயர்வான திருமண உறவு மகிழ்வையும், மிக உயர்வான பெற்றோர்/பிள்ளைகள் நிறைவையும் செயல் விளக்கப்படுத்தவும், ஒருவர் பிறருடைய தேவைகளைச் சந்திப்பதில் மிக உயர்வான அளவு இருப்பதாகத் தோற்றம் தரவும் வேண்டியிருந்தன.

பல குடும்பங்கள் பேட்டியெடுக்கப்பட்டன. தகவல்கள் முறைப்

*படுத்தப்பட்டு ஆராயப்பட்டபோது, அந்தக் குடும்பங்களில் ஆறு பண்புகள் குறிப்பிடத்தக்க வகையில் மேல்தோன்றின:*

*(1) அவர்கள் ஒருவர் பிறரை மதித்தலை வெளிப்படுத்தினர்.*

*(2) அவர்கள் நல்ல செய்தித்தொடர்பு முறைமையைச் செயல் விளக்கப்படுத்தினர்.*

*(3) குடும்பம் ஒன்றுகூடி நேரத்தைச் செலவிட்டது.*

*(4) குடும்பத்தின் உறுப்பினர்கள், தங்களைக் குடும்பத்திற்கென்று அர்ப்பணித்திருந்தனர்.*

*(5) அவர்கள் மிக உயர்வான வகையில் மதத்தைச் சார்ந்திருந்தனர்.*

*(6) குடும்பமானது இடர்ப்பாட்டை நேர்மறையான வகையில் கையாளத் திறன் கொண்டிருந்தது.*

*அது இவ்வரலாற்றின் முடிவாயிருக்கவில்லை. முனைவர் ஸிடின்னெட் அவர்கள் இந்தக் கண்டுபிடிப்புகளைப் பேட்டிகளில் ஈடுபட்டிருந்த பிறருடன் பகிர்ந்துகொண்டபோது, இந்தப் பண்புகள் ஒவ்வொன்றும் வேதாகமத்தில் கையாளப்பட்டிருப்பதை அவர்கள் புரிந்துணர்ந்தனர். அது நம்மை வியப்பில் ஆழ்த்தக்கூடாது. சங்கீதக்காரர் என்ன கூறினார்? "கர்த்தர் வீட்டைக் கட்டாராகில் அதைக் கட்டுகிறவர்களின் பிரயாசம் விருதா."*

*தனிப்பட்ட உறவுமுறைகள் உட்பட வாழ்வின் ஒவ்வொரு வட்டாரத்திலும் எழும் கேள்விகளுக்கு வேதாகமம் பதில்களைக் கொண்டுள்ளது என்பதை உணர்ந்தறிதலானது இன்றைய நாட்களில் உள்ள குடும்பங்களின் மாபெரும் தேவைகளில் ஒன்றாக உள்ளது. நீங்கள் ஒரு மாபெரும் திருமண உறவைக் கொண்டிருக்க வேண்டுமென்றால், நீங்கள் வேதாகமத்தினிடம் செல்ல வேண்டும். நீங்கள் ஒரு மாபெரும் குடும்பத்தைக் கொண்டிருக்க வேண்டுமென்றால், நீங்கள் வேதாகமத்தினிடம் செல்ல வேண்டும். நீங்கள் ஒரு மாபெரும் நட்புறவைக் கொண்டிருக்க விரும்பினால் நீங்கள் வேதாகமத்தினிடம் செல்ல வேண்டும். "நீங்கள் புதிய ஏற்பாட்டின் எந்தப் பக்கத்தையும் தற்செயலாகத் திறந்து பார்த்து, அதில் ஒருவர் மற்றவருடன் இணக்கமாயிருத்தல் எவ்வாறு என்பது பற்றி சில விஷயங்களைக் காண முடியும்"[5] என்று கூறப்பட்டுள்ளது - மற்றும் நான் அதை நம்புகின்றேன். நாம் ஒருவர் மற்றவருடன் இணக்கமாயிராமல் தேவன்மீது அன்புகூர முடியாது என்று யோவான் வலியுறுத்தினார் (1 யோவான் 4:20, 21). நாம் எவ்வாறு நடத்தப்பட வேண்டும் என்று விரும்புகின்றோமோ, அதேபோல் நாம் பிறரையும் நடத்த வேண்டும் என்று இயேசு அறிவித்தார் (மத்தேயு 7:12).[6] நாம் இரக்கம் காண்பிக்காது இருந்தால் "இரக்கம் இல்லாத நியாயத்தீர்ப்பை" பெறுவோம் என்று யாக்கோபு கூறினார் (யாக்கோபு 2:13; KJV)!*

*பலமான, மகிழ்ச்சியான கிறிஸ்தவக் குடும்பங்களைக் கட்டியெழுப்புகின்ற அந்த வேதாகமக் கொள்கைகளை முன்வைப்பதற்கு நாம் பல்வகையான அணுகுமுறைகளைப் பயன்படுத்த முடியும் - மற்றும் அந்த அணுகுமுறை ஒவ்வொன்றும் மதிப்புடையதாக இருக்கும். ஏற்கனவே பட்டியலிடப்பட்ட ஆறு அணுகுமுறைகளைப் பயன்படுத்தி, அவை*

ஒவ்வொன்றும் வேதாகமத்தில் எவ்வாறு போதிக்கப்பட்டுள்ளது என்று பரிசீலனை செய்தலே நமது அணுகுமுறையாக இருக்கும். மேற்கூறப்பட்ட ஒவ்வொன்றையும் தொடமட்டுமே நம்மால் முடியும், ஆனால் நாம் குறைந்தபட்சம், நாம் விரும்புகின்ற வகையிலான குடும்பத்தைக் கொண்டிருக்க வேண்டுமென்றால் - வேதாகமத்தில் காணப்படுகிற அறிவுறுத்தல்களைப் பின்பற்றுவதன்மூலம் - அந்த குடும்பங்களைக் கட்டுவதற்குக் கர்த்தரை அனுமதிக்க வேண்டும் என்ற சிந்தனையை மனதில் பதிக்க முடியும்.[7]

## பரஸ்பரம் மதித்தல்

பலமான குடும்பங்களின் முதல் பண்பு பின்வரும் வார்த்தைகளில் விளக்கப்பட்டது: "பலமான குடும்பங்கள், ஒருவர் பிறர்மீது மதிப்புக் கொண்டுள்ளதைச் சீராக விளக்கப்படுத்தின. அவர்கள் உளவியல் ரீதியாக ஒருவர் மற்றவரைக் கட்டியெழுப்பினர் மற்றும் தங்களைப் பற்றி மற்றவர்கள் நல்லவிதமாக உணரும்படி செயல்பட்டனர்."[8]

அவ்வகையான செய்தித்தொடர்பு குடும்பத்தில் முக்கியமானதாக உள்ளது. செய்தித்தொடர்பு என்பது பொதுவாகவே வாழ்க்கையில் முக்கியமானதாக உள்ளது. நாம் யாவருமே மதிக்கப்பட விரும்புகின்றோம். சில எதிர்மறைகள் எப்போதுமே வாழ்வின் பாகமாக இருக்கும், ஆனால் ஒரு சிறிதளவு எதிர்மறையியல் என்பது நீண்டதூரம் செல்லுகிறது. நேர்மறையான செய்தித்தொடர்பு என்பது குடும்பத்திற்குள் உள்ள நெருங்கிய உறவுமுறைகளில் விசேஷமாக முக்கியமானதாக உள்ளது. நமது குடும்ப வட்டாரத்திற்கு வெளியில் உள்ளவர்களால் நாம் மதிக்கப்படாமல் அல்லது விமர்சிக்கப்பட்டு இருக்கலாம்; ஆனால் நமக்கு மிகவும் முக்கியமானவர்களிடமிருந்து அதே நடத்துதலை நாம் பெறும்போது, அது நம்மைச் சீரழிக்கக்கூடும்.

மதிப்பை வெளிப்படுத்துதல் மற்றும் ஒருவர் பிறரைக் கட்டியெழுப்புதல் ஆகியவற்றைப் பற்றி வேதாகமம் ஏதாவது கூறுகிறதா? அது கூறுகிறது என்று நீங்கள் அறிவீர்கள். நாம், எபேசியர் 4:29ஐ முந்திய பாடம் ஒன்றில் பயன்படுத்தினோம்: "கெட்டவார்த்தை ஒன்றும் உங்கள் வாயிலிருந்து புறப்பட வேண்டாம்; பக்திவிருத்திக்கு [கட்டியெழுப்புவதற்கு] ஏதுவான நல்ல வார்த்தை உண்டானால் அதையே கேட்கிறவர்களுக்குப் பிரயோஜனமுண்டாகும்படி பேசுங்கள்." சிந்தைக்கு வருகிற இன்னொரு வேதவசனப்பகுதி, 1 தெசலோனிக்கேயர் 5:11 ஆகும்: "ஆகையால் நீங்கள் செய்துவருகிறபடியே, ஒருவரையொருவர் தேற்றி, ஒருவருக்கொருவர் பக்திவிருத்தி உண்டாகும்படி செய்யுங்கள்." மதிப்பை வெளிப்படுத்துதலில் தவறுதல் என்ற நிலைப்பாட்டில் இருந்து இப்பாடக்கருத்தைக் காணுகையில், லூக்கா 17ல் இயேசுவின் கவலைமிகுந்த கேள்விக்கு நாம் செல்ல முடியும்: "சுத்தமானவர்கள் பத்துப்பேர் அல்லவா, மற்ற ஒன்பது பேர் எங்கே?" நம்மில் பலர் நமது குடும்பங்களுக்கு மிகவும் நன்றியுள்ளர்களாய் இருக்க வேண்டும், ஆனால் மிகவும் அடிக்கடி நாம் நமது ஆசீர்வாதங்களை நமக்குச் சேரவேண்டியவைதான் என்று நினைத்து விடுகின்றோம்.

"குடும்பத்தில் நமது வார்த்தைகள் ஒருக்காலும் எதிர்மறையான வைகளாய் இருக்ககூடாதா?" என்று யாரேனும் ஒருவர் கேட்கலாம். இல்லை, அது நியாயமற்றதாக, இயல்புக்கு மாறானதாக மற்றும் வேதவசன ரீதியல்லாததாக இருக்கும்; ஆனால் நாம் ஒரு சமநிலையைக் காத்துக்கொள்ள முடியும். இல்லத்தில் வாய்மொழி செய்தித்தொடர்பு என்பது 80% நேர்மறையானதாக இருக்க வேண்டும் என்று செய்தித் தொடர்பு வல்லுநர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.[9] நாம் இதைப்பற்றிப் பவுலிடமிருந்து ஒரு பாடத்தைக் கற்றுக்கொள்ள முடியும். விதிப்படி பவுல், எதிர்மறையைக் கையாள்வதற்கு "பலவற்றை ஒட்டும்" முறையைப் பயன்படுத்தினார்: அவர் ஒரு நிருபத்தை நேர்மறையுடன் தொடங்கி, பின்பு எதிர்மறையை கையாளுவார், கடைசியில் ஒரு நேர்மறையான குறிப்புடன் முடிப்பார். எதிர்மறையுடன் தொடங்கி, பின்பு எதிர்மறையை கையாளுவார், கடைசியில் ஒரு நேர்மறையான குறிப்புடன் முடிப்பார். எதிர்மறையானது, அன்பு மற்றும் மதித்தல் என்பவற்றின் நேர்மறையான உறுதிப்பாடுகளுக்கு நடுவில் "வைக்கப்பட்டிருக்கும்."

## நல்ல செய்தித்தொடர்பு

ஆராய்ச்சியாளர்கள், "நல்ல செய்தித்தொடர்பு வடிவமைப்புகள்" என்பதை அடுத்த பண்பாகப் பட்டியலிட்டனர்.

எனது நாற்பதுக்கும் மேற்பட்ட ஆண்டுகள் ஆற்றுப்படுத்தும் அனுபவத்தில், குறைவான செய்தித்தொடர்பானது, இடர்ப்பாடுள்ள திருமண உறவுகள் மற்றும் இடர்ப்பாடுள்ள குடும்பங்கள் ஆகியவற்றில் எவ்வித மாறுபாடுமின்றி ஒரு பிரதான காரணியாக இருந்துள்ளதைக் கண்டிருக்கின்றேன். ஆகையால், "நல்ல செய்தித்தொடர்பு வடிவமைப் புகள்" பலமான திருமண உறவுகளுக்கும் குடும்பங்களுக்கும் ஒரு பண்பாக இருக்கிறது என்பதைக் கற்பதில் எனக்கு வியப்பு எதுவும் இல்லை.[10]

செய்தித்தொடர்பு - சில தேவைகள் அதிக முக்கியமானவைகளாய் இருக்கின்றன, ஆனால் சில தேவைகள் சந்திப்பதற்கு மிகவும் கடின மானவைகளாய் இருக்கின்றன. பேசப்படுகிற மற்றும் எழுதப்படுகிற வார்த்தையின் மூலம் செய்தித்தொடர்பு கொள்வதற்கு வாழ்வு முழுவதின் முயற்சிகளைச் செலவிட்டவன் என்ற வகையில் நான், சில வேளைகளில் ஏறக்குறைய பெரும் வருத்தம் அடைகின்றேன். ஒரு சிந்தனையை, ஒரு கருத்தை அல்லது ஒரு உணர்வை ஒரு தனிநபரிடத்தில் இருந்து இன்னொருவருக்கு எடுத்துச் செல்லுதல் என்பது எவ்வளவு கடினமானதாக உள்ளது!

செய்தித்தொடர்பு என்ற பாடக்கருத்து விரிவானதாக உள்ளது, ஆனால் இங்கு பலமான குடும்பங்களில் உள்ள செய்தித்தொடர்பின் பண்புகளில் சிலவற்றைப் பற்றிய பட்டியல் ஒன்று உள்ளது:

(1) பலமான குடும்பங்களில் உள்ள உறுப்பினர்கள் ஒருவர் மற்ற வருடன் செய்தித்தொடர்பு கொள்ள முயற்சிக்கின்றனர்; அவர்கள் புரிந்துகொள்ளவும் புரிந்துகொள்ளப்படவும் விரும்புகின்றனர். அவர்கள் கவனித்துக் கேட்பதற்கு நேரம் எடுத்துக் கொள்கின்றனர்.

*(2) பலமான குடும்பங்களின் உறுப்பினர்கள் தாங்கள் எப்படி உணருகின்றனர் என்பதை தயங்காமல் வெளிப்படுத்துகின்றனர் - அப்படிப்பட்ட வெளிப்பாடு ஊக்கப்படுத்தப்படுகிறது.*

*(3) பலமான குடும்பங்களில், உறுப்பினர்கள் ஒவ்வொன்றைக் குறித்தும் ஒரே விதமாக உணரவேண்டும் என்ற அவசியம் இருப்பதில்லை. (ஆனாலும்) வெவ்வேறு உறுப்பினர்கள் ஒருவர் மற்றவர் மீது மதிப்புக் கொண்டுள்ளனர்.*

*(4) பலமான குடும்பங்களில், விஷயங்கள் எவ்வாறு கூறப்பட்டது என்பதற்குத் தரப்படுவதைக் காட்டிலும் அதிகமுக்கியத்துவம், கூறப்பட்ட விஷயம் என்ன என்பதற்குத் தரப்படுவதில்லை.*

*(5) பலமான குடும்பங்களில், செய்தித்தொடர்பு என்பது எதிர்மறையின் மீதல்ல, ஆனால் நேர்மறையின்மீதே மையங்கொண்டுள்ளது.*

*(6) பலமான குடும்பங்களின் உறுப்பினர்கள் ஒருவர் கூறுவதை மற்றவர் உற்றுக்கவனிக்கக் கற்றுக்கொள்கின்றார் - மற்றும் அதற்கு ஏற்ற வகையில் வாய்மொழியாகவும் வாய்மொழியற்ற வகையிலும் பதில் அளிக்கின்றார்.*[11]

*(7) பலமான குடும்பங்களில், செய்தித்தொடர்பு என்பது மிக உயர்ந்த வகையில் உடனடியாக எழுவதாக உள்ளது - இது ஏராளமான நகைச்சுவையுடன் மேற்கோளிடப்படுகிறது.*

இந்தப் பண்புகள் தொடர்பாக வேதவசனங்கள் ஏதேனும் *உங்கள் நினைவுக்கு வருகிறதா? பேசுதல் மற்றும் கவனித்தல் மீது பல வேதவசனப்பகுதிகள் கவனம் குவிக்கின்றன. யாக்கோபு 1:19ஆ,* "யாவரும் கேட்கிறதற்குத் தீவிரமாயும், பேசுகிறதற்குப் பொறுமையாயும், கோபிக்கிறதற்குத் தாமதமாயும் இருக்கக் கடவர்கள்" என்று கூறுகிறது. பின் வருவன போன்ற மற்ற வசனப்பகுதிகள், இல்லத்தில் பிறருடன் இருக்க வேண்டிய நமது உறவுமுறைகளின் பொதுவான எண்ணப்போக்குகளைக் *கருத்தாகத் தெரிவிக்கின்றன:*

> *சகலவிதமான கசப்பும், கோபமும், மூர்க்கமும், கூக்குரலும், தூஷணமும் மற்ற எந்தத் துர்க்குணமும் உங்களை விட்டு நீங்கக்கடவது. ஒருவருக்கொருவர் தயவாயும் உருக்கமாயும் இருந்து, கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்ததுபோல, நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள் (எபேசியர் 4:31, 32).*

> *ஆகையால், நீங்கள் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட பரிசுத்தரும் பிரியருமாய், உருக்கமான இரக்கத்தையும், தயவையும், மனத்தாழ்மையையும், சாந்தத்தையும், நீடிய பொறுமையையும் தரித்துக்கொண்டு; ஒருவரையொருவர் தாங்கி, ஒருவர்பேரில் ஒருவருக்குக் குறைபாடு உண்டானால், கிறிஸ்து உங்களுக்கு மன்னித்ததுபோல, ஒருவருக்கொருவர் மன்னியுங்கள். இவை எல்லாவற்றின்மேலும், பூரண சற்குணத்தின் கட்டாகிய அன்பைத் தரித்துக்கொள்ளுங்கள் (கொலோசெயர் 3:12-14).*

*நான் இன்னொரு பாடத்தில் சுருக்கமாகக் குறிப்பிட்டிருந்த ஒரு வசனம் விசேஷமாக ஏற்புடையதாக காணப்படுகிறது: "அன்புடன் சத்தியத்தைக் கைக்கொண்டு, தலையாகிய கிறிஸ்துவுக்குள் எல்லா வற்றிலேயும் நாம் வளருகிறவர்களாயிருக்கும்படியாக ..." (எபேசியர் 4:15). அவ்வசனப்பகுதியில், தேவனுடைய வசனத்தின் சத்தியமே வலியுறுத்தமாக உள்ளது (யோவான் 17:17), ஆனால் அதன் சந்தர்ப்பப்பொருளானது "சத்தியம்" என்ற வார்த்தையின் மிகப்பரவலான பயன்பாட்டை அனு மதிக்கும் - அதாவது, பொதுவான சத்தியம். 25ம் வசனத்தை வாசியுங்கள்: "அன்றியும் ... பொய்யைக் களைந்து, அவனவன் பிறனுடனே மெய் யைப் பேசக்கடவன்." நாம் இதைக் குடும்ப உறவுமுறைகளுக்கு நடை முறைப்படுத்துவோம். நாம் நமது செய்தித்தொடர்பில் சுதந்திரத்தைக் கொண்டிருக்க வேண்டும்; நாம் ஒருவருக்கொருவர் உண்மை பேசுவதற்குச் சுதந்திரமாக உணரவேண்டும். அதே வேளையில், நாம் ஒரு கட்டுப்பாட்டை ஏற்றுக்கொள்ள வேண்டும்: நாம் பேசுகின்ற விஷயமானது எப்போதுமே அன்பினால் சாரமேற்றப்பட்டதாக இருக்க வேண்டும். உண்மை மற்றும் அன்பு என்ற இந்த இரு விஷயங்களும் எப்போதுமே ஒன்றாகச் செல்ல வேண்டும். இங்கு நினைவுகூரத்தக்க ஒரு வரி உள்ளது: "அன்பற்ற உண்மை என்பது மிகச்சிறந்த உணர்வற்ற தன்மையாகவும் மிக மோசமான சர்வாதிகாரமாகவும் உள்ளது, ஆனால் உண்மையற்ற அன்பு என்பது மாய்மாலமாக உள்ளது."*

## ஒன்றுகூடியிருக்கும் நேரம்

*"ஒன்றுகூடி செலவிடப்பட்ட நேரம்" என்பது அடுத்து பட்டியலிடப் பட்ட பண்பாக இருந்தது. பண்புகளில் பல ஒன்றின் மேல் இன்னொன்று கவிந்துள்ளன என்பது தெளிவு: நீங்கள் ஒன்றுகூடி நேரத்தை செலவிடாதிருந்தால், உங்களால் மதிப்பை வெளிப்படுத்தவோ அல்லது செய்தித்தொடர்பு மேற்கொள்வதற்குக் கற்றுக்கொள்ளவோ இயலாது.*

*ஒன்றுகூடி நேரத்தைச் செலவிடுதல் - தரமான நேரத்தையும் பெரிய அளவு நேரத்தையும் செலவிடுதல் - என்பது பல குடும்பங்கள் எதிர்கொள்ளுகிற மிகப்பெரிய அறைகூவல்களில் ஒன்றாக உள்ளது.[12] முனைவர் ஸ்டின்னெட் என்பவர் செய்தது போன்றே ஆராய்வைச் செய்திருந்த இன்னொரு பெண்மணி டாலொரெஸ் கர்ரென், Traits of a Healthy Family (ஆரோக்கியமான குடும்பத்தின் பண்புகள்) என்ற தலைப்பில் ஒரு புத்தகத்தை எழுதியுள்ளார். அந்தப் புத்தகத்தில் அவர், நேரக்குறைவு என்பது, ஆரோக்கியமான குடும்பத்தில் மிகப்பரவியிருக்கும் விரோதியாக இருக்கலாம் என்று கூறினார். இன்னொரு அதிகாரியான ஜேம்ஸ் டோப்ஸன் என்பவர், தங்கள் பணி அட்டவணைகளுக்கு அதிகமாக ஒப்புக்கொடுத்திருக்கும் எந்தக் குடும்பத்தையும் தாம் அறிந்திருந்ததில்லை என்று கூறினார்.[13]*

*நமது சமூகத்தில் ஒரு முறை, பெரும்பாலான செயல்பாடுகள் குடும்பத்தைச் சுற்றியே சுழன்றன, ஆனால் பல குடும்பங்களில் இது*

இன்னும் உண்மையாய் இருப்பதில்லை. வயது வந்தவர்களுக்கான எண்ணற்ற நிறுவனங்களினாலும் பிள்ளைகள் ஈடுபாடு கொண்டுள்ள செயல்முறைகளினாலும் வாழ்வு என்பது துணுக்குகளாக்கப்பட்டு விட்டது, குடும்பங்கள் ஒன்றுகூடிச் செலவிட நேரத்தைக் காண்பது கடினமாகி விட்டது. பலமான, ஆரோக்கியமான, மகிழ்வான கிறிஸ்தவக் குடும்பங்கள் ஒன்றுகூடியிருப்பதற்கென்று நேரத்தை ஏற்படுத்திக்கொள்கின்றன.

நேரத்தை ஒன்றுகூடிச் செலவிடுதலுக்கான அவசியம், உபாகமம் 6:5-7, 9 போன்ற வேதவசனப்பகுதிகளினால் அடிக்கோடிடப்படுகிறது:

> நீ உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழு பலத்தோடும் அன்புகூருவாயாக. இன்று நான் உனக்குக் கட்டளையிடுகிற இந்த வார்த்தைகள் உன் இருதயத்தில் இருக்கக்கடவது. நீ அவைகளை உன் பிள்ளைகளுக்குக் கருத்தாய்ப் போதித்து, நீ உன் வீட்டில் உட்கார்ந்திருக்கிறபோதும், வழியில் நடக்கிறபோதும், படுத்துக்கொள்ளுகிறபோதும், எழுந்திருக்கிறபோதும் அவைகளைக் குறித்துப் பேசி ... அவைகளை உன் வீட்டு நிலைகளிலும், உன் வாசல்களிலும் எழுதுவாயாக.

இங்கு தரப்பட்டுள்ள அறிவுறுத்துதல், நீங்களும் உங்கள் பிள்ளைகளும், உங்கள் வீட்டிலும், நீங்கள் பயணம் செய்கின்றபோதும், படுக்கும் நேரத்திலும் மற்றும் காலை வேளையிலும் ஒன்றுகூடியிருப்பீர்கள் என்று கற்பிதம் செய்துகொள்கிறது.

இவ்வசனப்பகுதியானது, விழித்திருக்கும் ஒவ்வொரு கணமும் குடும்பத்தில் உள்ள பிறருடன் செலவிடப்பட வேண்டும் என்று அர்த்தப்படுத்துவதில்லை.[14] இது, பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுடன் இருக்க நேரம் எடுத்துக்கொள்ள வேண்டும் என்றும், இளம் வயதினர் தங்கள் பெற்றோருடன் இருக்க நேரம் எடுத்துக்கொள்ள வேண்டும் என்றும் அர்த்தப்படுகிறது. குடும்ப நடவடிக்கைகள் நமது பணி அட்டவணையின் அத்தியாவசியமான பாகமாய் இருக்கின்றன. (சில குடும்பங்கள் “குடும்ப இரவுகள்” என்பதை வரையறை செய்து கொள்கின்றன.) இதைச் செய்வதற்கு, நமது வாழ்வில் பொருளாதாரத்திற்குத் தந்துள்ள வலியுறுத்தத்தைக் குறைத்து, மிக முக்கியமானது எது என்பதைத் தீர்மானிக்க வேண்டியது அவசியமாகிறது (மத்தேயு 6:24-34). உதாரண மாக, ஆரோக்கியமான குடும்பங்கள் மற்ற குடும்பங்களைக் காட்டிலும் குறைவான நேரமே தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைக் கவனிக்கின்றன என்று டாலொரெஸ் கர்ரென் கண்டறிந்துள்ளார்.

## குடும்ப அர்ப்பணிப்பு

அடுத்த பண்பு பின்வரும் வார்த்தைகளில் விளக்கப்படுகிறது: “குடும்பத்திற்கென்று அர்ப்பணித்து இருத்தல்.”

குடும்ப அர்ப்பணிப்பு என்பது இரண்டு விளக்கங்களைக் கொண்டுள்ளது: (1) குடும்பம் முழுமைக்கும் என்று அர்ப்பணித்திருத்தல்,

*அதாவது, குடும்பம் செயல்படவும் தொடர்ந்து இருத்தலுக்கான ஒரு அர்ப்பணிப்பு. (2) குடும்பத்தின் தனிநபர்களுக்கென்று அர்ப்பணிப்பு. சகோதரர்கள் மற்றும் சகோதரிகள், இந்த இரண்டாவது கொள்கையை பலவீனமான வழிமுறையில் விவரிக்கின்றனர். எனது வாழ்வு முழுவதிலும் நான், "காய் ரோப்பர் பற்றி என்னால் பேச முடியும், ஆனால் நீங்கள் பேசாதிருப்பது நல்லது, ஏனென்றால் அவர் என் சகோதரர்" என்ற தத்துவத்தைக் கொண்டிருந்தேன்.*

*ஆராய்ச்சியாளர்கள் சமீபத்திய ஆண்டுகளில், ஒவ்வொருவருக்கும் "குடும்பம்" என்ற கருத்துணர்வு தேவைப்படுகிறது; ஒவ்வொருவருக்கும் வேர்கள் தேவைப்படுகிறது; ஒவ்வொருவருக்கும் குடும்பப் பாரம்பரியங்கள் தேவைப்படுகிறது என்பதை மறுபடியும் கண்டறிந்துள்ளனர். இந்தப் பிணைப்புகள் நமது வாழ்வில் நிலைப்புத் தன்மையைக் கொண்டுவருகின்றன.*

*"குடும்பம்" என்ற கருத்துணர்வு பற்றிப் பல வசனப்பகுதிகள் பேசுகின்றன. எடுத்துக்காட்டாக, 1 தீமோத்தேயு 5:4, "விதவையானவளுக்குப் பிள்ளைகளாவது, பேரன் பேத்திகளாவது இருந்தால், இவர்கள் முதலாவது தங்கள் சொந்தக் குடும்பத்தைத் தேவபக்தியாய் விசாரித்து, பெற்றோர் செய்த நன்மைகளுக்கு பதில் நன்மை களைச் செய்யக் கற்றுக்கொள்ளக்கடவர்கள்; அது நன்மையும் தேவனுக்கு முன்பாகப் பிரியமுமாயிருக்கிறது" என்று கூறுகிறது. NIV வேதாகமம் "பிள்ளைகளாவது பேரப்பிள்ளைகளாவது இருந்தால், அவர்கள் தங்கள் சொந்தக் குடும்பத்திற்காக அக்கறை செலுத்துதல் மற்றும் தங்கள் பெற்றோர்கள் மற்றும் தாத்தா பாட்டிகள் ஆகியோர் மீது அக்கறை செலுத்துதல் ஆகியவற்றின்மூலம் முதலில் தங்கள் பக்தியை நடைமுறைப்படுத்த வேண்டும்; இதுவே தேவனுக்குப் பிரியமானதாகும்" என்று கூறுகிறது.*

*1 தீமோத்தேயு 5:8, ஏற்புடைய இன்னொரு வசனமாகும்: "ஒருவன் தன் சொந்த ஜனங்களையும், விசேஷமாகத் தன் வீட்டாரையும் விசாரியா மற்போனால், அவன் விசுவாசத்தை மறுதலித்தவனும், அவிசுவாசியிலும் கெட்டவனுமாயிருக்கிறான்." அவிசுவாசிகள்கூட குடும்ப உணர்வறிவைக் கொண்டிருப்பதைப் பவுல் உற்றுநோக்கியிருந்தார். கிறிஸ்தவர்கள் அவ்வுணர்வைக் கொண்டிராதிருப்பது எவ்வளவு கவலைக்குரியதாக உள்ளது!*

*குடும்ப அர்ப்பணிப்பு என்பது எங்கே (அல்லது யாரிடத்தில்) தொடங்குகிறது? இது, (1) தங்கள் திருமண உறவு செயலாற்றும்படி ஒருவர் மற்றவருக்காக அர்ப்பணித்துள்ளவர்களும், (2) திருமணம் என்பது வாழ்நாள் முழுவதற்குமானது என்று போதிக்கிற மத்தேயு 19:3-9 மற்றும் இதுபோன்ற வசனப்பகுதிகளை விசுவாசிக்கின்றவர் களாகவும், (3) agape - அன்பினால் அதாவது, அர்ப்பண உணர்வுள்ள அன்பினால், சுயநலமற்ற அன்பினால், நிபந்தனையற்ற அன்பினால் நிரம்பி - ஒருவர் மற்றவரை மகிழ்வுடன் காத்துக்கொள்வதற்குத் தங்களை அர்ப் பணித்துள்ளவர்களாகவும் இருக்கின்ற தந்தை மற்றும் தாயிடத்தில் இருந்து தொடங்குகிறது.*

இன்னும் உங்களுக்குக் கருத்து பிடிபடாது இருக்குமென்றால், இந்தப் பண்புகள் யாவற்றிற்கும் பெற்றோர்களே[15] திறவுகோல்களாக உள்ளனர் - தாயைக் காட்டிலும் தந்தையானவர் இன்னும் அதிகம் பொறுப்பு வாய்ந்தவராக இருக்கின்றார்.

## மதத்தைப் பற்றிய மதிப்பீடுகள்

“மதத்தைப் பற்றிய உயர்வான மதிப்பீடு” என்பது ஆரோக்கியமான, மகிழ்ச்சியான குடும்பங்களின் இன்னொரு பண்பாக உள்ளது.

முனைவர் ஸ்டின்னெட் அவர்கள், மதத்தைப் பற்றிய மதிப்பீட்டைக் கொண்டிருத்தல் என்பது, சபைக்கு வருதல், பக்திவிருத்திக்கு ஏதுவான நடவடிக்கைகளில் பங்கேற்றல் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளதென்று கவனித்து இருக்கின்றார், ஆனால் அதில் இன்னும் அதிக விஷயங்கள் உள்ளடங்கியிருக்கின்றன. பலமான குடும்பங்கள் “ஆவிக்குரிய வாழ்வுமுறைக்கு” தங்களை அர்ப்பணித்து இருக்கின்றன என்று அவர் கூறினார். வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால், அவர்களின் விசுவாசம், அவர்களின் வாழ்வின் ஒவ்வொரு பாகத்தையும் தொடுகிறது. பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளிடத்தில் “நாம் செய்கின்றவற்றை ஏன் செய்கின்றோம் என்றால், நாம் இருக்க வேண்டிய பிரகாரம் இருக்கவும் மற்றும் நாம் விசுவாசிக்கும் விஷயங்களினாலும்தான்” என்று கூறுகின்றனர்.

ஆழமான மதரீதியான நம்பிக்கைகள் ஆரோக்கியமான குடும்பத்திற்கு பல பங்குகளை அளிக்கின்றன என்று ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர். அவர்களின் நம்பிக்கைகள், அவர்களின் வாழ்விற்கான நோக்கம் பற்றிய கருத்துணர்வையும், பெலத்தையும் கொடுக்கிறது. குடும்பத்தின் உறுப்பினர்கள் மதரீதியான தங்கள் அர்ப்பணிப்பில் இருந்து ஆதரவையும் பலத்தையும் தரவழைத்துக்கொள்கின்றனர். அவர்களின் மதரீதியான படிப்புகளில், அவர்கள் பொறுமை, மற்றும் மன்னித்தல், கோபத்தை கையாளுவது எப்படி, நேர்மையான எண்ணப்போக்குகளின் முக்கியத்துவம் ஆகியவற்றைக் கற்றுக் கொள்கின்றனர் - இவையாவும் மகிழ்ச்சியான குடும்பத்திற்கு அத்தியாவசியமானவைகளாக உள்ளன. அவர்களின் பொதுவான மதிப்பீடுகள், பலமான, மகிழ்ச்சியான குடும்பத்திற்கு இன்றியமையாதவைகளாக இருக்கும் “சட்டங்களை” வடிவமைக்கின்றன.

ஸ்டின்னெட் அவர்களால் பட்டியலிடப்பட்ட ஆறு பண்புகளில், இது ஒன்று மாத்திரமே நான் சற்று மாற்றி எடுத்துரைக்கும் பண்பாக உள்ளது. “பலமான, மகிழ்ச்சியான குடும்பங்களைக் கட்டியெழுப்புதல்” என்பதே நமது தலைப்பாக உள்ளது, [எனவே] நான், “மதரீதியான மதிப்பீடுகள்” என்பதை “கிறிஸ்தவ மதிப்பீடுகள்” என்று மாற்றுவேன்.

“மதிப்பீடுகள்” என்பதை நமது படிப்பில் நான் ஐந்தாவதாகப் பட்டியலிட்டுள்ளேன். இதற்கு ஒரே காரணம், இதுவே ஸ்டின்னெட் அவர்கள் கொடுத்த வரிசைமுறையாக உள்ளது என்பதே. இது இந்தப் பட்டியலில் முதலாவதாக இருக்க வேண்டும் என்ற எனது கூற்றை

*நீங்கள் ஒப்புக்கொள்வீர்கள் என்று நான் நிச்சயமாகவே நம்புகின்றேன். நமது வேதவசனப்பகுதியை நினைவில் வையுங்கள்: "கர்த்தர் வீட்டைக் கட்டாராகில், அதைக் கட்டுகிறவர்களின் பிரயாசம் விருதா." மதிப்பீடுகள் என்பதன் தொடர்பாக பல கொள்கைகள் குறிப்பிடப்பட முடியும் (மற்றும் வேண்டும்), ஆனால் நாம் நான்கின்மீது மாத்திரம் கவனம் குவிப்போம்.*

*(1) பலமான, மகிழ்ச்சியான கிறிஸ்தவக் குடும்பத்தைக் கொண்டிருப்பதற்கு, தந்தையும் தாயும் ஆகிய இருவருமே விசுவாசம் நிறைந்த கிறிஸ்தவர்களாக, கிறிஸ்துவுக்காகத் தங்களை ஒப்புக்கொடுத்த வர்களாக இருக்க வேண்டும். குடும்ப உறுப்பினர்கள் ஒவ்வொருவரும், விசுவாசம் மற்றும் ஞானஸ்நானத்தின் மூலமாகக் கிறிஸ்துவை "தரித்துக்கொள்ள" வேண்டும் (கலாத்தியர் 3:26, 27).*

*(2) பலமான, மகிழ்ச்சியான கிறிஸ்தவக் குடும்பத்தைக் கொண்டிருப்பதற்கு, பெற்றோர்கள் தங்களுடைய பிள்ளைகளுக்கு கர்த்தருடைய வழியைப் போதிக்கும் பொறுப்பு தங்களுக்கு உள்ளது என்பதை உணர்ந்தறிய வேண்டும். பிள்ளைகளுக்கு வேதாகம வகுப்புகள் கிடைக்கும் என்றால், அவைகள் துணைக்கருவிகளாக மாத்திரமே இருக்க முடியும், ஆனால் முதல்நிலைப் பொறுப்பு பெற்றோரின் (அதிலும் விசேஷமாக, தந்தையின்) தோள்களின்மீதே உள்ளது (எபேசியர் 6:4ஐக் காணவும்).*

*(3) பலமான, மகிழ்ச்சியான கிறிஸ்தவக் குடும்பத்தைக் கொண்டிருப்பதற்கு, குடும்ப உறுப்பினர்களில் கணக்கு ஒப்புவிக்க வேண்டிய வயதுடைய யாவரும், கர்த்தருடைய சபையில் விசுவாசம் நிறைந்த உறுப்பினர்களாய் இருக்க வேண்டும். அவர்கள் "சபைக்கு செல் பவர்களாக" மாத்திரம் இருக்க முடியாது; அவர்கள் சபையைத் தங்களின் "விரிவாக்கப்பட்ட குடும்பத்தின்" இன்றியமையாத அங்கம் என்று கருதுகின்ற, செயல்துடிப்புமிக்க உறுப்பினர்களாய் இருக்க வேண்டும்.[16]*

*(4) பலமான, மகிழ்ச்சியான கிறிஸ்தவக் குடும்பத்தைக் கொண்டிருப்பதற்கு, (தாய் மற்றும் தந்தை தொடங்கி) குடும்பத்தின் உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் - இல்லத்திலிருந்து தொடங்கி - வாழ்வின் ஒவ்வொரு பகுதியிலும் கிறிஸ்தவக் கொள்கைகளை நடைமுறைப்படுத்தப் பிரயாசப்பட வேண்டும்.*

## இடர்ப்பாட்டிற்குத் தீர்வு

*"இடர்ப்பாட்டிற்கு நேர்மறையான வகையில் தீர்வுகாணும் திறமை" என்பது நிறைவான பண்பாக உள்ளது.*

*"இடர்ப்பாடு" என்பது பெரிய பிரச்சனையாக உள்ளது. இப்படிப்பட்ட பிரச்சனைகளுக்கு வழக்கமான வழிமுறைகளில் தீர்வைக்கண்டறிய இயலாது; அதுதான் அப்பிரச்சனையை இடர்ப்பாடாக்குகிறது.[17] பலவீனமான குடும்பங்களைப் போன்றே, பலமான குடும்பங்களும் இடர்ப்பாடுகளைக் கொண்டுள்ளன. அவைகள் அவற்றை எவ்வாறு கையாளுகின்றன என்பதிலேயே வேறுபாடு உள்ளது: பலமான குடும்பங்கள் அவற்றை நேர்மறையான வகையில் கையாளுகின்றனர்.*

*ஆரோக்கியமான குடும்பங்கள், அடிப்படையில் இடர்ப்பாடுகளை நேர்மறையாக வகையில் தீர்க்கக்கூடியவைகளாக உள்ளன, ஏனென்றால் அவைகள் ஏற்கனவே பட்டியலிடப்பட்டுள்ள பண்புகளைக் கொண்டுள்ளனர். அவர்கள் ஒன்றுகூடியிருக்க நேரம் செலவிடுவதாலும், ஒருவர் மற்றவரை மதிப்பதாலும், பிரச்சனைகள் எழுகின்றபோது சிதைவடையாத பலமான உறவுகளைக் கொண்டிருப்பதாலும் இதைச் செய்ய முடிகிறது. அவர்கள் செய்தித்தொடர்பு கொள்ளுவதால், தங்களின் பிரச்சனைகளினூடே பேசமுடிகிறது. குடும்பத்திற்கான அவர்களின் அர்ப்பணிப்பால், அவர்கள் குடும்பம் பிய்த்தெறியப்படுவதை அனுமதிக்க மாட்டார்கள். அவர்களின் விசுவாசத்தினிமித்தம், இடர்ப்பாட்டில் இருந்து எழக்கூடிய சாத்தியக்கூறுள்ள பலன்களை அவர்களால் காணமுடிகிறது.*

*இடர்ப்பாட்டைக் கையாளுதல் என்பது சுலபமானதல்ல, ஆரோக்கியமான குடும்பங்கள், மற்ற குடும்பங்களைப் போன்றே தங்கள் பிரச்சனைகளுடன் போராட வேண்டியுள்ளது. இருப்பினும், அவர்களுடைய இல்லங்களில் உள்ள நேர்மறையான பண்புகளினால், அவர்கள் இடர்ப்பாட்டில் இருந்து, பலவீனமான தனிநபர்களாக அல்ல, ஆனால் பலமான குடும்பங்களாக எழுகின்றனர்.*

*கிறிஸ்தவக் குடும்பங்களைப் போல் வேறு எந்தக் குடும்பமும் அவ்வளவு நேர்மறையாக இடர்ப்பாட்டை எதிர்கொள்ளத் திறனுடையவைகளாய் இருக்க முடியாது. கிறிஸ்தவக்குடும்பங்களில் உள்ளவர்கள் ஒருவர் மற்றவரை பலத்திற்காக மாத்திரம் கொண்டிருப்பதில்லை, ஆனால் அவர்கள் பின்வருவது போன்ற வாக்குத்தத்தங்களையும் கொண்டுள்ளனர்:*

> *அன்றியும் அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய்த் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கேதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம் (ரோமர் 8:28).*

> *என் சகோதரரே, நீங்கள் பலவிதமான சோதனைகளில் அகப்படும்போது, உங்கள் விசுவாசத்தின் பரீட்சையானது பொறுமையை உண்டாக்குமென்று அறிந்து, அதை மிகுந்த சந்தோஷமாக எண்ணுங்கள். நீங்கள் ஒன்றிலும் குறைவுள்ளவர்களாயிராமல், பூரணராயும் நிறைவுள்ளவர்களாயும் இருக்கும்படி, பொறுமையானது பூரண கிரியை செய்யக்கடவது (யாக்கோபு 1:2-4).*

## *முடிவுரை*

*நாம் ஆழ்ந்து சிந்தித்துள்ள ஆறு பண்புகளைப் பற்றி, கடைசியாக ஒருமுறை கண்ணோக்கம் செலுத்துவோம். பலமான, மகிழ்ச்சியான கிறிஸ்தவக் குடும்பங்களில்:*

*(1) மதித்தல் வெளிப்படுத்தப்படுகிறது.*

*(2) செய்தித்தொடர்பு முறைமைகள் நல்லவைகளாய் இருக்கின்றன.*

*(3) குடும்பம் ஒன்றுகூடி நேரத்தைச் செலவிடுகிறது.*

*(4) குடும்பத்தின் உறுப்பினர்கள், தங்களைக் குடும்பத்திற்கென்று அர்ப்பணித்திருக்கின்றனர்.*

*(5) அவர்கள் மிக உயர்வான வகையில் மதத்தை (அதாவது, கிறிஸ்தவத்தைச்) சார்ந்திருக்கின்றனர்.*

*(6) குடும்பமானது இடர்ப்பாட்டை நேர்மறையான வகையில் கையாளத் திறன் கொண்டிருக்கிறது.*

*நாம் எதார்த்தமானவர்களாய் இருக்க வேண்டும். கொடுக்கப்படும் எந்த நேரத்திலும், ஒருசில குடும்பங்களே இந்த ஆறுபண்புகளையும் 100 சதவிகிதம் கொண்டுள்ளன. ஒவ்வொரு குடும்பமும் நல்ல நாட்களையும் மற்றும் மோசமான நாட்களையும் கொண்டுள்ளது. ஆனால் நமது குடும்பங்களில் இந்தப் பண்புகளை வளரும் அளவுகளில் நிலைநாட்டுவதற்கு நாம் யாவரும் உழைக்க முடியும். இவைகள் இயல்புக்கு மாறானவைகளாகவோ அல்லது அடையமுடியாத உயர்சிறப்பானவைகளாகவோ இருப்பது இல்லை; இந்த பண்புகள் யாவும் வேதாகமத்தில் போதிக்கப்பட்டுள்ளன.*

*நாம் பலமான, மகிழ்ச்சியான கிறிஸ்தவக் குடும்பங்களைக் கொண்டிருக்க வேண்டுமென்றால், நாம் (1) தேவனுடைய உதவியுடன் நமது குடும்பங்களே இருக்க வேண்டிய முறைப்படி இருக்கச் செய்யும்படி தீர்மானித்துக்கொள்ள வேண்டும், (2) பலமான குடும்பங்கள் செய்கின்றவற்றைச் செய்யத் தொடங்க வேண்டும், மற்றும் (3) கர்த்தரைச் சார்ந்திருக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். "நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங்குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதல்களினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள்" (பிலிப்பியர் 4:6).*[18]

---

*குறிப்புகள்*

[1]*இந்த எடுத்துரைப்பு, இராய்ஸ் மணி அவர்களின் Building Stronger Families* (Wheaton, Ill.: Victor Books, 1984) *என்ற புத்தகத்தின் முதல் பாதியின் அடிப்படையில் அனுமதியுடன் அமைந்துள்ளது.* [2]*Fortune என்ற பத்திரிக்கையானது நிதிநிலை விஷயங்கள் தொடர்பான செய்திகளையும் கட்டுரைகளையும் வெளியிடுகிறது.* "Fortune 500" *என்பது அமெரிக்காவில் பணம் ஈட்டுவதில் முன்னணியில் உள்ள 500 நிறுவனங்களைக் குறிக்கிறது.* [3]*முனைவர் இராய்ஸ் மணி என்பவர் இப்போது அபிலேன் கிறிஸ்தவப் பல்கலைக்கழகத்தின் தலைவராக இருக்கின்றார். அதற்கு முன்பு அவர் அதே பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளராக இருந்து, ஆற்றுப்படுத்துதல் மற்றும் குடும்பம் ஆகியவற்றில் சிறப்புக் கவனம் செலுத்தினார். நான் பட்டப்படிப்பில் பல வகுப்புகளை அவரின்கீழ் கொண்டிருந்தேன்.* [4]*இந்தப் பாடத்தொடரில் எல்லாப் பாடங்களிலும் உள்ளதுபோன்று இந்தப் பிரசங்கம் குறிப்பாக மேற்கத்திய கலாச்சாரங்களில் உள்ள பிரச்சனைகளை நோக்கியதாக இருக்கும். உங்கள் கலாச்சாரம் மாறுபட்டதாக இருந்தால், நீங்கள் இந்த எடுத்துரைப்பைத் தழுவியமைக்க வேண்டியிருக்கும். உங்கள் கலாச்சாரத்திலும்*

*கூட இங்கு வரைகுறிப்பிடப்பட்ட பிரச்சனைகளில் சில இல்லையென்றாலும், அது அனேகமாக அந்த திசையில் முன்னேறிக் கொண்டிருக்கும் என்று நான் உறுதியாய்க் கூறமுடியும். உங்கள் உரையைக் கேட்பவர்களிடத்தில் அதன் தாக்கங்களைக் குறைப்பதற்கென்று இந்தக் கொள்கைகளைப் போதிப்பதற்கு இதுவே தக்க வேளையாக உள்ளது.* [5]Money, 15. [6]*உறவுமுறைகள் பற்றிய புதிய ஏற்பாட்டின் போதனைகளில் உள்ள சுருக்கமான ஆய்வில் நீங்கள் மத்தேயு 6:12ஐயும் உள்ளடக்க விரும்பலாம்.* [7]*பாடங்களின் இந்தத் தொடரில் அவ்வப்போது நான், திருமணம் மற்றும் குடும்பம் ஆகியவற்றில் சிறப்புப்பாடம் படித்துள்ள ஆண்கள் மற்றும் பெண்கள் பற்றி மேற்கோள் காண்பித்துள்ளேன். இவர்களை "அதிகாரத்துவம் உள்ளவர்கள்" என்று நான் மேற்கோள் காண்பிப்பதில்லை என்பதைப் புரிந்துகொள்ளுங்கள். வேதாகமம் மாத்திரமே அதிகாரத்துவம் பெற்றதாக உள்ளது; தேவனுடைய வசனம் மாத்திரமே வழுவாததாக இருக்கிறது. மாறாக நான், வேதாகம சத்தியங்களை விவரிப்பதற்காக இவைகளை மேற்கோள் காண்பித்துள்ளேன். கிறிஸ்தவரல்லாத எழுத்தாளர்களைப் பவுல் மேற்கோள் காண்பித்தபோது (நடபடிகள் 17:28; தீத்து 1:12) இதற்கு ஒரு முன்னுதாரணத்தை அமைத்துள்ளார்.* [8]Money, 16. [9]Ibid., 18. [10]*செய்தித்தொடர்பு என்பது மிகவும் முக்கியமானதாக உள்ளது, இதைப்பற்றி நான் ஒரு முழுப்பிரசங்கத்தையே எழுதியுள்ளேன். குடும்பம் பற்றி நான் பிரசங்கித்த பிரசங்கத்தொடர் ஒன்றில், செய்தித்தொடர்பு பற்றிய பிரசங்கத்தைப் பின்தொடர்ந்து பலமான குடும்பத்தின் ஆறு பண்புகள் பற்றிய இந்தப் பிரசங்கத்தை செய்தேன்.*

[11]*நாம் "வாய்மொழியற்ற வகையிலும்" அதாவது நாம் கண்ணோக்கும் விதத்தில், நாம் நிற்கும் அல்லது அமரும் விதத்தில், மற்றும் நமது உடல் அமைவுநிலையில்கூட செய்தித்தொடர்பு கொள்கின்றோம். வாய்மொழியற்ற வகையில் நேர்மறையாகப் பதிலுரைப்பதற்கு, நாம் பேச்சாளரை அவரது கண்களில் உற்றுநோக்கலாம், முன்னாக சாயலாம், அல்லது ஒப்புக்கொள்ளும் வகையில் நமது தலையை அசைக்கலாம்.* [12]*தங்கள் பிள்ளைகளுடன் செலவழிக்கச் சிறிதளவு நேரமே கொண்டுள்ள பெற்றோர்களை உற்சாகப்படுத்துவதற்காக "நேரத்தின் தரம் எதிர் நேரத்தின் அளவு" என்ற கருத்தை யாரோ ஒருவர் நினைத்துப்பார்த்தார். அந்தப் பெற்றோர்களுக்கு, "தரமான நேரம்" என்பது "நேர அளவு" என்பதைக்காட்டிலும் அதிக முக்கியத்துவம் வாய்ந்தது என்றும், அவர்கள் தங்கள் பிள்ளைகளுடன் "தரமான நேரத்தை" செலவிட வேண்டும் என்று கூறப்படுகிறது. இந்த வித்தியாசமானது உண்மையின்கூறு ஒன்றைக் கொண்டுள்ளது: சில பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுடன் ஒவ்வொரு நாளும் இருக்கின்றனர் ("நேர அளவு"), ஆனால் அவர்கள் உண்மையில் தங்கள் பிள்ளைகளிடத்தில் (அவர்களுக்கு "தரமான நேரத்தைத் தருதல்" என்பதில்) அதிக கவனம் செலுத்துவதில்லை. நீங்கள் உங்கள் பிள்ளையுடன் முப்பது நிமிடம் செலவிடுதல் மூலம் அவர்களுக்குத் "தரமான நேரத்தை" அளிக்கத் திட்டமிடும் வேளையானது அவன் அல்லது அவள் வேறு ஏதேனும் செய்ய விரும்புகின்ற வேளையாய் இருக்கலாம். நமது பிள்ளைகளிடத்தில் நேர்மறையான செல்வாக்கைக் கொண்டிருப்பதற்கு, நாம் அவர்களுடன் "நேர அளவைச்" செலவிட்டு அதை "தரமான நேரம்" ஆக்கலாம். இந்தத்தொடரின் பிற்பகுதியில் நான், "போதிக்கக்கூடிய கணங்கள்" பற்றிப் பேசுவேன். அந்த "போதிக்கக்கூடிய கணங்கள்" என்பவை "தரமான நேரத்தின்" ஒரு சில நிமிடங்களில் அட்டவணைப்படுத்த முடியாதவைகளாய் இருக்கின்றன. நாம் நமது பிள்ளைகளுடன் நேரத்தை - "நேர அளவு" மற்றும் "தரமான நேரம்" ஆகிய இரண்டையும் - செலவிட வேண்டும், அதாவது, அவர்களுக்கு நாம் தேவைப்படும் வேளையில் நாம் அவர்களுடன் இருக்க வேண்டும்.* [13]*இவ்விரண்டு ஆதாரமூலங்களும் மணி*

*அவர்களால் குறிப்பிடப்பட்டுள்ளன, 43. [14]ஆற்றுப்படுத்துபவர்கள், குடும்பத்தின் உறுப்பினர்கள் யாவரும் தங்கள் சொந்த வழியில் சென்றுகொண்டு தனித்தனியான வாழ்வுமுறையை நடத்துவதைக் குறிப்பிட "ஈடுபாடற்ற குடும்பங்கள்" என்ற சொற்றொடரையும், குடும்பத்தின் உறுப்பினர்கள் யாவரும் ஒவ்வொரு செயலையும் ஒன்றுகூடிச் செய்து, தனித்துவமே இல்லாத நிலையைக் குறிப்பிட "சிக்கலான வலையில் உள்ள குடும்பம்" என்ற சொற்றொடரையும் பயன்படுத்துகின்றனர். இவ்விரண்டு மட்டுமீறிய எல்லைகளுக்கும் இடையில் ஒரு சமானநிலையை அடைய நாம் முயற்சி செய்ய வேண்டும். [15]நான் பொதுவாக,* "Dad" *மற்றும்* "Mom" *என்ற சொற்றொடர்களைப் பயன்படுத்துகின்றேன். பாசத்தைக் குறிப்பதற்கான இதே போன்ற சொற்றொடர்கள் வேதாகமத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளன (எடுத்துக்காட்டாக,* "Abba" *என்பது "தந்தையை" பாசத்துடன் குறிப்பிடும் ஒரு வழிமுறையாக உள்ளது* [*மாற்கு 14:36; ரோமர் 8:15; கலாத்தியர் 4:6*]*). உங்களுக்கு வசதியான, உங்கள் சமூகத்தில் மதிப்பு நிறைந்ததாகக் கருதப்படுகிற மற்றும் உங்கள் உரையைக் கேட்பவர்களுடன் மிகச்சிறந்த முறையில் செய்தித்தொடர்பு கொள்வதற்கான எந்தச் சொற்றொடரையும் பயன்படுத்துங்கள். [16]எபேசியர் 5:25, சபையின்மீது கிறிஸ்து கொண்டுள்ள அன்பைப் பற்றிக் கூறுகிறது; நமது கிறிஸ்தவ சகோதர சகோதரிகள்மீது நாம் அதே வகையான அன்பைக் கொண்டிருக்க வேண்டும். [17]சிலவேளைகளில், ஆற்றுப்படுத்துபவர்கள் இடர்ப்பாடு என்பதை இரு வகையாக பிரிக்கின்றன. (1) மனித வாழ்வின் சுழற்சியில் மாறுதல் காலகட்டத்தின் போது நடக்கின்றதான, முன்னுரைக்கக்கூடிய வளர்நிலை இடர்ப்பாடுகள். இந்த வகையானது பிறப்புகள், திருமணங்கள் மற்றும் இயற்கையான காரணங்களால் ஏற்படும் மரணங்கள் ஆகியவற்றை உள்ளடக்குகிறது. (2) தற்செயலான இடர்ப்பாடுகள் - கடுமையான வியாதிகள், வேலையை இழந்து போகுதல் மற்றும் இயற்கைக்கு மாறான மரணம் என்பவை போன்ற - வாழ்வில் குறைவாக எதிர்பார்க்கப்படும் பேரழிவுகளாக இருக்கின்றன. [18]இந்தப் பாடத்தை ஒரு பிரசங்கமாகப் பயன்படுத்தும்போது, அதன் முடிவில் உங்கள் உரையைக் கேட்பவர்கள் பலமான, மகிழ்ச்சியான கிறிஸ்தவ குடும்பங்களைக் கொண்டிருக்க விரும்பினால், அவர்கள் முதலில் விசுவாசம் நிறைந்த கிறிஸ்தவர்களாய் இருக்க வேண்டும் என்று நீங்கள் வலியுறுத்த விரும்பலாம். "நம்மில் ஒவ்வொருவரும் சுயபரிசோதனையுடன் தொடங்க வேண்டியுள்ளது: குடும்பத்தில் நான் இருக்க வேண்டிய பிரகாரம் இருக்கின்றேனா?" கிறிஸ்தவரல்லாதவர்களுக்கு, கிறிஸ்தவராவது எப்படி என்பதைக் கூறுங்கள் (கலாத்தியர் 3:26, 27), மற்றும் விசுவாசமற்றுப்போன கிறிஸ்தவர்களுக்கு, மீளக்கட்டப்படுவது எப்படி என்பதைக் கூறுங்கள் (நடபடிகள் 8:22; யாக்கோபு 5:16).*